தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் பெண்களுக்கு சணல் பைகள் தயாரிப்பு பயிற்சி

மதுரை, ஜன.28–

மதுரையில் இயற்கை சணல் பைகள் தயாரிப்பு இலவச தொழில் முனைவோர் பயிற்சி, அகமதாபாத் இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (இ.டி.ஐ.ஐ) சார்பில், வில்லாபுரம் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியின் நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா இ.டி.ஐ.ஐ சார்பில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 55க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர். இதில் சுயஉதவி குழு உறுப்பினர்கள், சிறு மற்றும் குறு தொழில் முனைவோர், துவக்க நிலை தொழில் முனைவோர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கு இ.டி.ஐ.ஐ நிறுவனத்தின் தொழில் முனைவு நிபுணர் கே.சரவணன் வரவேற்புரை வழங்கி, பயிற்சியின் நோக்கம், பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் மற்றும் இத்தகைய பயிற்சிகளின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தொழில் முனைவோர் நிதி அலுவலர் ஆர்.மணிமேகலை, மேம்பாட்டு அலுவலர் பி.பாலமுருகன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட ஊரக வளர்ச்சி மற்றும் தமிழக பஞ்சாயத்துராஜ் துறை ஆகியோர் கலந்து கொண்டு, பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துரை வழங்கினர். மணிமேகலை தனது உரையில், பாரம்பரிய மற்றும் இயற்கை சார்ந்த மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிப்பை அடிப்படையாக கொண்டு பெண்கள் சுயதொழில் தொடங்க முன்வர வேண்டும் என்றும், இத்தகைய தொழில்கள் நம் கலாச்சாரத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் முக்கிய பங்காற்றுகின்றன என்று வலியுறுத்தினார்.

பயிற்சியில் பங்கேற்ற பெண்கள் தங்களது கற்றல் அனுபவங்களையும், பயிற்சியால் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும், வரும் காலங்களில் இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பெண்களுக்கான பல்வேறு இலவச தொழில் பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சிகளில் சேர விரும்புபவர்கள் 87547 53107 என்ற கைபேசி எண்ணுக்கு தங்களது பெயரை குறுஞ்செய்தி மூலம் அனுப்பி பதிவு செய்யலாம். அதோடு, நடைபெறும் நேர்முக தேர்வில் நேரடியாக பங்கேற்கும் வசதியும் உள்ளது என தொழில் முனைவு நிபுணர் கே.சரவணன் கூறினார்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல்

திருநெல்வேலி, ஜன.28–

திருநெல்வேலி என நமது ஊருக்கு பெயர் வரக்காரணமான தைப்பூசத் திருவிழாவின் 4 ம் திருநாளான அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் திருகோயிலில், "நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல்" நடைபெற்றது.

வேணுவனம் எனும் நகரில் சுவாமிக்கு நித்திய அபிசேகம் ஆராதனை செய்து, பூஜித்து வரும் வேதசர்மா சுவாமிக்கு அமுது படைக்க, வீடு வீடாக சென்று நெல் வாங்கி வந்து அமுது தயாரித்து, பூஜிப்பது வழக்கம். ஒரு நாள் அதே போன்று வீடு வீடாக சென்று நெல் வாங்கி வந்து மூலலிங்கத்தின் முன்பு உலரப் போட்டு விட்டு, தாமிரபரணி நதிக்கரைக்கு நீராட சென்றார். அவர் நீராடி கொண்டிருக்கும் போது பெருமழை பெய்தது. நீராடிக்கொண்டிருந்த அவருக்கு செய்வதறியாது புலம்பினார். சுவாமி அமுதுக்காக உலரப் போட்டிருந்த நெல் வெள்ளத்தில்போயிருக்குமே. இனி யாரிடம் சென்று நெல் வாங்குவேன் என்று புலம்பிக் கொண்டு நெல் உலரப் போட்டிருந்த இடத்திற்கு சென்று பார்த்தார். என்னே அதிசயம். நெல் உலரப் போட்ட இடத்தில் மட்டும் வெயில் அடித்தது. நெல் போட்டபடியே கிடந்தது. தண்ணீர் தேங்கியது காயப் போட்ட நெல்லின் கீழே மட்டும் மழைத்தண்ணீர் படாத அதிசயம்.

இந்த அதிசயத்தை பாண்டிய ராஜாவிடம் சொல்லி அழைத்து வந்து "நெல்லுக்கு வேலியிட்டு காத்த நெல்வேலி நாதரை" அன்னை காந்திமதி அம்மையுடன் சுவாமி நெல்லையப்பர் காட்சி தருதல் நிகழ்ச்சி இன்று திருகோயிலில் நடைபெற்றது. இதன் அடிப்படையில் இன்று மதியம் நெல்லுக்கு வேலியிட்ட திருவிழா நடைபெற்றது.

திருநெல்வேலி என நமது ஊருக்கு பெயர் வரக்காரணமான தைப்பூசத் திருவிழாவின் 4 ம் திருநாளான அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் திருகோயிலில், "நெல்லுக்கு வேலியிட்ட திருவிளையாடல்" நடைபெற்றது

திருவப்பூர் கோயிலில் இன்று குடமுழுக்கு

புதுக்கோட்டை, ஜன.28–

புதுக்கோட்டை நகரில்பிரசித்தி பெற்ற திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயிலில் ரூபாய் பல லட்சம் செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு முன் மண்டபம் கட்டப்பட்டு மகா குடமுழுக்கு இன்று நடைபெற்றது.

இதனையொட்டி அனுகிரக விக்னேஸ்வர பூஜை ஆகியவை கடந்த 23 ஆம் தேதி மாலை தொடங்கியது. பூஜைகளை பிள்ளையார்பட்டி பிச்சை குழுக்கள் தொடங்கி வைத்தார். 24 ஆம் தேதி வாஸ்து சாந்தி, ரகஷரபந்தனம் ஆகியவை நடந்தன. 25 ஆம் தேதி காலை மகா மாரியம்மன் ஸ்நபந ஹோமம், கடஸ்தாபனம் மாலை முதல் கால யாக பூஜை நடந்தது.

நேற்று முன்தினம் இரண்டும் மற்றும் மூன்றாம் கால பூஜைகள் நடந்தன. இதனை ஒட்டி திருவப்பூர் மற்றும் கவிநாடு கிராமங்கள் சார்பில் காட்டு மாரியம்மன் கோவிலில் இருந்து சீர்வரிசை பொருள்கள் எடுத்து வரப்பட்டன. இதேபோல் திருவப்பூர் ஜமாத்தார்கள் சார்பிலும் கோயிலுக்கு மங்களப் பொருள்கள் கொண்டு வரப்பட்டன. இந்நிலையில் இன்று காலை 6ஆம் கால பூஜை நிறைவு பெற்றதும் ஒன்பதே முக்கால் மணிக்கு ராஜகோபுரம் விமானத்தில் புனித நீர் ஊற்றப்பற்று குடமுழுக்கு செய்யப்பட்டது. விழா ஏற்பாடுகளை திருப்பணி மற்றும் விழா குழுவினர் திருவப்பூர் தமிழ்நாடு கிராம மக்கள் செய்து இருந்தனர்.

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை கிளை முன்

CP(CAA)/ 86/2025 ïš CA(CAA) 24 of 2025
CP(CAA)/ 88/2025 ïš CA(CAA) 62 of 2025

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவுகள் 230 முதல் 240 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் விண்ணப்பிக்கும் விஷயத்தில் மற்றும் ஜெம் உற்பத்தியாளர்கள் பிரைவேட் லிமிடெட் (பிரிக்கப்பட்ட நிறுவனம்) மற்றும் தாயார் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் (இதன் விளைவாக நிறுவனம்) மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குநர்களுக்கு இடையே ஏற்பாடுத் திட்டம் (பிரிக்கப்பட்டல்) விஷயத்தில்

GEM உற்பத்தியாளர்கள் பிரைவேட் லிமிடெட்
23,24 டெக்ஸ்டூல் ஃபீடர் ரோடு, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கணபதி, கோயம்புத்தூர்-641006 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது. மனுதாரர் / பிரிக்கப்பட்ட நிறுவனம்

தாயார் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட்
அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 302 மூன்றாம் மாடி ரத்னா மவுண்ட் என்க்ளேவ் 29F, 10, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா 641018. மனுதாரர் / இதன் விளைவாக நிறுவனம்

மனுவை விசாரிக்கும் அறிவித்தல்

ஜெம் உற்பத்தியாளர்கள் பிரைவேட் லிமிடெட் (பிரிக்கப்பட்ட நிறுவனம்) மற்றும் தாயார் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் (இதன் விளைவாக நிறுவனம்) மற்றும் அவற்றின் பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குநர்களுக்கு இடையே ஏற்பாடுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கோரி கம்பெனிகள் சட்டம், 2013 இன் பிரிவு 230-232 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மனுக்கள், பிரிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் அதன் விளைவாக நிறுவனத்தால் மாண்புமிகு தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை கிளையில் சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வழக்கில் 06 ஜனவரி 2026 (06.01.2026) ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன) மற்றும் மேற்கூறிய மனுக்கள் 25 பிப்ரவரி 2026 (25.02.2026) அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய மனுவை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எந்தவொரு நபரும், மாண்புமிகு தீர்ப்பாயம் மற்றும்/அல்லது மனுதாரரின் வழக்கறிஞரின் விருப்பம் குறித்த நோட்டீஸை அவரது / அவள் வழக்கறிஞர் கையொப்பமிட்ட அவரது பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்ப வேண்டும், இதனால் காகிதம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாண்புமிகு தீர்ப்பாயம் மற்றும்/அல்லது மனுதாரரின் வழக்கறிஞரை அணுக முடியும். அத்தகைய நபர் மனுவை எதிர்க்க முற்படும் பட்சத்தில், எதிர்ப்புக்கான காரணங்கள் அல்லது அவரது / அவள் பிரமாணப் பத்திரத்தின் நகல் அத்தகைய அறிவிப்புடன் வழங்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் நகல் கீழே கையொப்பமிட்டவரால் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதன் பின்னர் தேவைப்படும் எந்தவொரு நபருக்கும் வழங்கப்படும்.

ரமணி & ஷங்கர் அட்வகேட்ஸ்
மனுதாரர் நிறுவனங்களுக்கான வழக்கறிஞர்
152, காளிதாஸ் சாலை, ராம் நகர்,
கோயம்புத்தூர்-641009.

தேதி : 24.01.2026
இடம்: கோயம்புத்தூர்

IndusInd Bank

பதிவு அலுவலகம்: இன்டஸ்இந்த் வங்கி லிமிடெட், 2401 ஜெனரல் திம்மையா சாலை (கன்டோன்மென்ட்), புனே 411 001, இந்தியா
எண். 25, ஸ்டீபிள் ரீச், ஏ பிளாக், 3வது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை – 600086

பிற்சேர்க்கை – IV [விதி 8 (1)] அசையாச் சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு

அதேசமயம், கீழே கையொப்பமிட்டுள்ள இன்டஸ்இந்த் வங்கி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 (சட்ட எண்.54/2002) (SARFAESI சட்டம்) மற்றும் உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் பிரிவு 13(12) மற்றும் 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 03.06.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, அதன் மூலம் கடன்தாரர் M/s. **மில்லினியம் சாப்ட் டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட்** சார்பாக அதன் இயக்குனர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் **திரு. வி. பாஸ்கர், திரு. வி. நந்தகுமார் மற்றும் திருமதி மாலதி** ஆகியோர், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 31-05-2022 அன்று வரையிலான **ரூ. 3,87,91,466.60 (ரூபாய் மூன்று கோடியே எண்பத்தி ஏழு லட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து நானூற்று அறுபத்தி ஆறு மற்றும் அறுபது பைசா மட்டும்),** வட்டி மற்றும் செலவுகளுடன், மேற்படி அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழ்க்கையொப்பமிட்டவர், மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணத்தில் உள்ள தஞ்சாவூர் நீதிமன்றத்தின் குற்றவியல் மனு எண் 420/2024, நாள் 29/07/2025 தேதியிட்ட உத்தரவின்படி, சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) மற்றும் அதன் விதிகளின் விதி 9 ன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை **ஜனவரி 23, 2026** அன்று சுவாதீனம் எடுத்துள்ளார்.

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் தெரிவிப்பது யாதெனில் யாரும் இந்த சொத்து தொடர்பாக எந்த பரிவர்த்தனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் 31.12.2025 அன்று **ரூ.5,89,41,797/ – (ரூபாய் ஐந்து கோடியே எண்பத்தொன்பது லட்சத்து நாற்பத்தோராயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்)** தொகைக்கு இன்டஸ்இந்த் வங்கி லிமிடெட்டின் பொறுப்பிற்கு உட்பட்டது.

இந்த ஈடுபெற்ற சொத்துக்களை பொறுத்தவரை, மீட்டுக்கொள்ள கால அவகாசம் உள்ளது என்று சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (8)ன் விதிகளுக்கு இணங்க கடன்தாரர்களுக்கு இதன்மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

அசையாச் சொத்தின் விளக்கம் :

திருமதி மாலதி, க/பெ. திரு. ராஜகோபால் அவர்களுக்கு சொந்தமான சொத்து, விற்பனைப் பத்திர ஆவண எண் 1431/2014, தேதி 13.06.2014, திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகம்.

தமிழ்நாடு – 612 104, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், கும்பகோணம் – மயிலாடுதுறை சாலை, கதவு எண் 8E, 'ஆதித்யா ஹெரிடேஜ் சர்வீஸ் வில்லா' என்றழைக்கப்படும் கட்டிடத்தின், பி பிளாக், முதல் தளத்தில் அமைந்துள்ள, பிளாட் எண் 308 (8E–XVI) கொண்ட குடியிருப்பு, இதன் கட்டப்பட்ட பரப்பளவு 845 சதுர அடி ஆகும். மேலும், 3987 சதுர அடி மொத்த நிலப்பரப்பில், 498 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பங்குடன் கூடியது. இந்த நிலம், தஞ்சாவூர் மாவட்டம், எண் 64, திருவிடைமருதூர் தாலுகா, விஸ்வநாதபுரம் கிராமம், திருவிடைமருதூர் சிறப்புப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட, ஆர்.எஸ். எண் 44/1A, 44/1B, 44/2, 44/3A, 44/5A, 44/6A ஆகியவற்றின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இதன் நான்கு எல்லைகள்: வடக்கில்: ஆர்.எஸ். எண்கள் 44/17 மற்றும் 44/9, தெற்கில்: ஆர்.எஸ். எண் 44/30, கிழக்கில்: ஆர்.எஸ். எண்கள் 44/17 மற்றும் 44/15, மேற்கில்: 44/5 (பிரதான சாலை).

திருவிடைமருதூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

தேதி : 27.01.2026 **இடம் : கும்பகோணம்** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இன்டஸ்இந்த் வங்கி லிமிடெட்**

HOUSING FINANCE

ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் பாஸ்ட்டிராக் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) CIN No: U65993MH2005PCL158168
ஐடிஐ ஹவுஸ், 36, டாக்டர் ஆர்.கே. ஷிரோத்கர் மார்க், பரேல், மும்பை – 400 012.
மின்னஞ்சல் முகவரி : compliance@fasttrackhfc.com. **இணையதளம் :** www.itihousing.com

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

கீழே கையொப்பமிட்ட ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் பாஸ்ட்டிராக் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, 2002 ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 3 உடன் பிரிவு 13(12)ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டு, மாற்று சேவையாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் கீழ்க்கண்ட கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள், உத்தரவாததாரர்கள் ஆகியோர், சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள், புதுப்பிக்கப்பட்ட வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத் தொகையையும் செலுத்தி, நிறுவனத்திற்கு தங்கள் பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். கடனை முறையாக திருப்பிச் செலுத்துவதற்கான பாதுகாப்பாக, பின்வரும் ஈடுபெற்ற சொத்துக்கள் (கள்) முறையே கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள், உத்தரவாததாரர்கள் ஆகியோரால் ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டில் (முன்னர் பாஸ்ட்டிராக் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ எண்.	கடன் கணக்கு எண். / கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	கோரிக்கை அறிவிப்பு தேதி என்பிஏ தேதி	மொத்த நிலுவைத் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் அசையா சொத்துக்கள்
1	**1. பரமேஸ்வரி, (கடன்தாரர்)** முகவரி: பழைய நத்தம் சர்வே எண். 530/1 பகுதி, புதிய நத்தம் சர்வே எண். 573/10, மல்லனாம்பட்டி கிராமம், நிலக்கோட்டை தாலுகா, நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் (SRO), திண்டுக்கல் பதிவு மாவட்டம் & திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, மல்லனாம்பட்டி அஞ்சல் திண்டுக்கல், தமிழ்நாடு 624202. **2. P பாண்டி (உடன் கடன்தாரர்)** இருவரது வசிப்பிடம்: எண். 2/63, தெற்குத் தெரு, மல்லனாம்பட்டி, நிலக்கோட்டை, திண்டுக்கல், மல்லனாம்பட்டி அஞ்சல் திண்டுக்கல், தமிழ்நாடு 624202. **கடன் கணக்கு எண்:** LLDIN01823-240003727	23/01/2026 09/01/2026	19/01/2026 அன்று ரூ.8,93,363/-	திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், நிலக்கோட்டை சார் பதிவாளர் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, மல்லனாம்பட்டி கிராமம்.1) பழைய நத்தம் சர்வே எண். 530/1 பகுதி, புதிய நத்தம் சர்வே எண். 573/10 அளவுகள்:கிழக்கு மேற்காக இருபுறமும்: 27 1/2 அடி, தெற்கு வடக்காக இருபுறமும்: 20 அடி, ஆக மொத்தம் 550 சதுர அடி. எல்லைகள்:மேற்கே அல்லது மேற்குப் பக்கம்: சுப்பையா ஆசாரிக்குச் சொந்தமான இடம், பொதுச் சுவர், 2 வது அயிட்டம் சொத்து.கிழக்கே அல்லது கிழக்குப் பக்கம்: வடக்கு தெற்காக தெரு, வடக்கே அல்லது வடக்கு பக்கம்: சுப்பையா ஆசாரிக்குச் சொந்தமான இடம், பொதுச் சுவர், தெற்கே அல்லது தெற்கு பக்கம்: கோபால் என்பவருக்குச் சொந்தமான இடம், பேச்சியம்மாள் என்பவருக்குச் சொந்தமான இடம். 2) பழைய நத்தம் சர்வே எண். 530/1 பகுதி, புதிய நத்தம் சர்வே எண். 573/10 அளவுகள் : கிழக்கு மேற்காக இருபுறமும்: 29 அடி, தெற்கு வடக்காக இருபுறமும் : 11 அடி, ஆக மொத்தம் 319 சதுர அடி. எல்லைகள்: மேற்கே அல்லது மேற்குப் பக்கம்: வடக்கு தெற்காக தெரு, கிழக்கே அல்லது கிழக்குப் பக்கம்: 1 வது அயிட்டம் சொத்து, வடக்கே அல்லது வடக்கு பக்கம்: சுப்பையா ஆசாரிக்குச் சொந்தமான இடம், பொது சந்து, தெற்கே அல்லது தெற்கு பக்கம்: கோபால் என்பவருக்குச் சொந்தமான இடம்.

மேற்கூறியபடி, கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு (முன்னர் பாஸ்ட்டிராக் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) பணம் செலுத்தத் தவறினால், ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் பாஸ்ட்டிராக் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்தை சொந்தமாக்கிக் கொள்ள உரிமை உண்டு, மேலும் சட்டப்படி நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடிய பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அதற்கான கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் கடன்தாரர்களையே சேரும். SARFAESI சட்டத்தின் பிரிவு 13ன் துணைப் பிரிவு (13)ன் கீழ், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்தை (களை) விற்பனை, குத்தகை அல்லது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு வழியில் ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் முன் அனுமதியின்றி மாற்றுவதற்கு மேற்கூறிய கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) தடைசெய்யப்பட்டுள்ளனர்.

இடம் : தமிழ்நாடு **ஐடிஐ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக**
தேதி : 28.01.2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**